**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 21.01.2026.**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து என் தகப்பனாருடன் கடையை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் தகப்பனார் ஆவார். நாங்கள் எம்.கே.எம் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறோம். கடந்த 25.08.2024 ம் தேதி இரவு 9.30 மணிக்கு நான், என் அப்பா, என் தம்பி மூவரும் கடையில் கடையை பூட்டுவதற்காக பொருட்களை உள்ளே எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது எதிரி சித்துராஜ் போஸ்டர் ஒட்டுவதற்காக பசை பாக்கெட் கேட்டார். அதன் விலை ரூ.30/- என சொன்னவுடன் தம்பியை அடிக்க வந்தார்.

2) பிறகு கெட்ட வார்த்தையால் திட்டினார். எதிரி முன்னால் இருந்த கண்ணாடி பாட்டில்களை எல்லாம் எடுத்து கீழே போட்டு உடைத்துவிட்டார். எதிரி என் தம்பியை கெட்ட வார்த்தையால் தெவிடியா பையா என்று சொல்லி பேசினார். பிறகு கொன்றுவிடுவதாக சொல்லி மிரட்டினார். இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் கடந்த 3 வருடங்களாக என் தகப்பனார் கடையில் முழு நேரமும் வியாபாரத்தை பார்த்து வருகிறேன். அதற்கு முன்பாக கல்லூரி சென்றுவிட்டு மற்ற நேரத்தில் வியாபாரத்தை பார்த்து வந்தேன். என் தம்பி நடேசராஜா சுமார் 1 வருடங்களாக என் தகப்பனார் கடையில் முழுநேர வியாபாரம் செய்து வருகிறார்.

4) சம்பவம் நடந்த சமயம் எதிரி கடைக்கு வந்த போது நானும், தம்பி, அப்பா ஆகியோர் இருந்தோம். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் இரவு 9.00 மணியிலிருந்து 09.30 மணியளவில் நடந்திருக்கும். பிரச்சனை நடந்தவுடன் போலீசாருக்கு தகவல் கொடுத்தோமா என்றால் என் தகப்பனார் போலீசாருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் என்பவர் சம்பவயிடம் வந்தார். புகார் அளிக்கும் போது நான் என் தந்தையுடன் சென்றேனா என்றால் இல்லை. ஆனால் என் தம்பி சென்றார். வழக்கு சம்மந்தமாக என்னை என்று போலீசார் விசாரித்தனர் என்றால் 27 ம் தேதி காவல் நிதலையத்தில் வைத்து வழக்கு சம்மந்தமாக மாலை 6 மணியளவில் விசாரித்தனர்.

5) சம்பவம் நடந்து மறுநாள் என் தகப்பனார் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எங்கள் கடையில் வாங்கிய பொருட்கள் தரம் குறைவாக உள்ளதாக அ.சா.1 இடம் முறையிட்டதால் அ.சா.1 எதிரி மீது தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் அடுத்த நாளே அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பார் என்றும் எதிரியால் சேதமான பொருட்களையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி என்னிடம் எந்தவிதமான தகராறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.